# ‘திராவிடர் கொலை வழக்கு: இந்திரன் விடுதலை’

Post 764 dated 28th December 2013.

ஆரியர்கள் இந்தியாவின் மீது படை எடுத்து வந்து, திராவிடக் கோழைகளை ஓட ஓட விரட்டினர் என்றும் ஆயுதமே இல்லாத அப்பாவித் திராவிடர்கள் காடு மலைகளில் ஒளிந்துகொண்டு நாகரீகம் முழுதையும் இழந்து மலை ஜாதி மக்களாக மாறி பழங்குடி மக்களாக வாழத் துவங்கினர் என்றும் 150 ஆண்டுகளாக வெள்ளைத்தோல் ஆராய்ச்சியாளர் எழுதிவந்தனர். பின்னர் திராவிடர்கள் மத்திய தரைக் கடல் அல்லது ஆப்பிரிக்காவில் இருந்து வந்தனர், அவர்களும் படை எடுப்பாளர்கள்தான் என்று கால்டுவெல் பாதிரியார் முதலியோர் எழுதி மக்களைக் குழப்பினர். மொத்தத்தில் அவர்கள் சொல்லவந்த செய்தி இதுதான்: “ நீங்கள் எல்லோரும் இந்திய பூமியின் சொந்தக்காரர்கள் இல்லை. வந்தேறு குடிகள் தான். நாங்கள் இன்றைக்கு வந்தோம், நீங்கள் அன்றைக்கு வந்தீர்கள். யார் வேண்டுமானலும் இந்தியாவை ஆளலாம்”.

இதற்குப் பின் 1930-களில் சிந்து சமவெளியில் ஒரு புதிய நாகரீகத்தின் சின்னங்கள் கிடைத்தன. உடனே எல்லோரும் ஆகாசத்துக்கும் பூமிக்கும் தாவிக் குதித்தனர், “ பார்த்தீர்களா! நாங்கள் அப்போதே சொன்னோம். இந்திரன் ஒரு கொலைகாரன் என்று. இப்போது அதற்கு தடயங்கள் கிடைத்துவிட்டன:”

சமீபத்திய ஆராய்ச்சி முடிவுகள் அவர்கள் முகத்தில் கரியைப் பூசியதோடு நில்லாமல் புதுப்புது தகவகளைக் கொடுக்கின்றன. தமிழர்களும், கலிங்கர்களும் எப்படி வியட்நாம் முதல் பிலிப்பன்ஸ்-இந்தோநேசியா வரை கலாசாரத்தைப் பரப்பினார்களோ அதுபோல வட இந்திய இந்துக்கள்

ஆப்பிரிக்கா, ஐரோப்பா ,அமெரிக்கா வரை நாகரீகத்தைப் பரப்பினார்கள் என்று துணியப்படுகிறது.

‘ யாதும் ஊரே யாவரும் கேளிர் ’ என்ற கனியன் பூங்குன்றனின் வாசகமும் (புறநானூறு 192) ‘ க்ருன்வந்தோ விஸ்வம் ஆர்யம் ’ (உலகம் முழுவதையும் பண்படுத்து) என்ற ரிக்வேத (9-63-5) வாசகமும் இந்தியர்களை உந்தித் தள்ளி ஊக்குவித்தன. இதனால் AIT= Aryan Invasion Theory, AMT= Aryan Migration Theory கொள்கைகள் தவிடு பொடியாகி IMT= Indian Migration Theory அல்லது OBT= Out of Bharat Theory கொள்கைகள் வலுப்பட்டு வருகின்றன.

## இந்திரன் மீது அபாண்ட குற்றச்சாட்டு

மொஹஞ்சதாரோ என்னும் சிந்து நதி தீர நகரத்தில் ஓரிடத்தில் 37 எலும்புக்கூடுகள் தாறு மாறான நிலையில் கிடந்தன. அவைகளில் இரண்டு மூன்று எலும்புக்கூடுகளில் வெட்டுக் காயங்களும் இருந்தன. உடனே சர் மார்ட்டிமர் வீ லர்என்பவர் 1947 ஆம் ஆண்டில் எழுதிய சிந்து சமவெளி ஆராய்ச்சிப் புத்தகத்தில் இப்படி எழுதினார்: “ இங்கே கிடைக்கக்கூடிய சூழ்நிலை சாட்சியங்களைக் கொண்டு பார்க்கையில் இதை சும்மா விட்டுவிடமுடியாது. குழந்தைகள், பெண்கள், ஆண்கள் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு இந்திரனையே குற்றவாளி என்று கருதலாம்.”

அப்போது இருந்த ஒரே ஆரிய எதிர்ப்பு அலையில் வெள்ளைத் தோலினர் என்ன சொன்னாலும் ஏற்றுக்கொண்டார்கள். ஏதேனும் ஆங்கிலத்தில் வந்துவிட்டால் அது எல்லாம் “ மாபெரும் அறிஞர்கள் வாக்கியம், ரிக் வேதத்துக்கும் மேலானது” என்ற மாயப் புகைமூட்டம் இந்தியாவை மூடி மறைத்திருந்தது.

1964ஆம் ஆண்டில் (G.F.Dales) ஜி.எF. டேல்ஸ் என்பவர் அந்த எலும்புக்கூடுகளை ஆராய்ந்து ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினார். அந்த மனிதர்கள் சிந்து நதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் மூழ்கி இறந்தவர்களுடையன என்றும் சில எலும்புக்கூடுகளில் காணப்படும் வெட்டுக்காயங்களும் காயம் ஆறிய பின்னரே அவர்கள் இறந்துள்ளனர் என்றும் விஞ்ஞானபூர்வமாகக் காட்டினார். இதை "மொஹஞ்சதாரோவின் மாயப் படுகொலை" 'The Mythical Massacre at Mohenjodaro' என்ற ஆய்வுக் கட்டுரையில் வெளியிட்டார். இதைப்பற்றி 1984ஆம் ஆண்டில் ஆய்வுக் கட்டுரை எழுதிய மற்றொரு அறிஞரான கே.எம்.ஶ்ரீவத்சவா "இனிமேல் இந்திரன் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்" என்று எழுதினார்.

ஒரு வழியாக ரிக்வேத இந்திரன் தப்பிப் பிழைத்தார்!!!

மேலும் இந்திரனை கிழக்கு திசைக்கு அதிபதியாகவே இந்துமத நூல்கள் வருணிக்கின்றன. கிழக்கு திசைக்கு பூர்வ திசை என்றே பெயர். அதையே முதல் திசையாகவும் கொள்வர்.அவர்கள் மேற்கு திசையிலிருந்து வந்திருந்தால், இன்று இந்திய முஸ்லீம்கள் மேற்கே மெக்காவை நோக்கித் தொழுவது போல இந்துக்களும் மேற்குத் திசையைக் கொண்டாடி இருப்பார்கள். ரிக்வேதத்தில் நதிகளின் பெயர்களைச் சொல்லும்போதுகூட கிழக்கில் உள்ள நதிகளின் பெயர்களைச் சொல்லி இறுதியில் மேற்கத்திய நதிகளைச் சொல்லுகின்றனர். ஆக இந்திரன் வடமேற்கில் இருந்து வந்த பேர்வழி என்ற வாதமும் அடிபட்டுப்போனது.

சரஸ்வதி நதி பற்றி அணு சக்தி விஞ்ஞானிகள் மற்றும் 'நாஸா' ஆய்வு தரும் அபூர்வ தகவலகளையும் டி.கிவிசில்ட் எழுதிய மரபியல் ஆராய்ச்சித் தகவல்களையும் மனசலா எழுதிய சிந்துவெளி குதிரை பற்றிய தகவல்களையும் தனியாகத் தருகிறேன். முந்தைய ஆரிய படை எடுப்புக் கொள்கைகளைத் தூள் தூளாக்கிவிட்டனர் இந்த ஆய்வாளர்கள்.

Contact swami_48@yahoo.com

My previous posts on the same theme:

1.Aryan Chapatti and Dravidian Dosa! 2.Aryan, Non Aryan Issue in Murder Attack in Britain! 3.Black Genius of India, 4.Kavadi and Cousin Marriage in North India, 5.Aryan Hitler and Hindu Swastika, 6.Were Moses and Jesus Aryans?, 7.Are these Customs Aryan or Dravidian?, 8.Who are Dravidians?, 9.'Dravidians are Invaders', 10.AYAS and ASVA : Most Misunderstood Words, 11.MLECHA: Most misunderstood word, 12.திராவிடக் காகமும் ஆரியக் கொக்கும்!, 13.திராவிடர்கள் யார்?, 14.ஆரியமா? திராவிடமா? நீங்களே சொல்லுங்கள்!, 15."மிலேச்ச" என்றால் என்ன?, 16.பொன் (அயஸ்) என்றால் என்ன?, 17.ஆரிய சப்பாத்தியும் திராவிட தோசையும், 18.ஆரிய ஹிட்லரும் ஹிந்து ஸ்வஸ்திகாவும் 19.தமிழன் காதுல பூ!!! 20.Biggest Brainwash in the World